
# ஸ்ரீ அனுக்ரஹ லஹரி

## (ஓம் ஸ்ரீ சக்கரை அம்மா கவசம்)

அறிவின் தெளிவே அருவிப் பொழிவே
ஆசையின் முடிவே ஆகம வடிவே
இகபர அருளே இன்பப் பொருளே
ஈசன் மகளே ஈகைத் திரளே
உயர்ந்த நிலையே உள்முகக் கலையே
ஊறும் பாம்பின் சக்கரத் திருவே
எது கேட்டாலும் கொடுக்கும் தாயே
ஏற்றம் மீதெனை ஏற்றிடும் மாயே



ஐம்புலன் அடக்கி ஆளும் பரமே

ஐந்நிலம் செழிக்க அருளும் தவமே

ஒளிர்மனம் படைக்க உதவும் ஒளியே

ஓய்வினைத் தடைசெய் ஓம்கார விழியே

அத்தனை சித்தினை ஊட்டும் அமுதே

அடியவர்க் கடியனாய் சரணுன் பதமே

அறமெனும் அரசில் பூக்கும் மலரே

திறமெனும் திரவியம் திறக்கும் நிலவே

தவமே தவத்துள் தவமுற்ற தவமே

வரமே வரத்துள் வரப்பெற்ற வரமே

வேத கோஷத்தில் த்வனிக்கின்ற ஒலியே

நாதா காஷத்தில் நடமிடும் வெளியே

ஓதும் கவசத்தின் உணர்வில் வரவே

ஓதா மனதை ஓதுதற் கருளே

அருள் வாய் வழியே ஆசியும் அருள்வாய்

அறியா மருளில் அருளாய் ஒளிர்வாய்

பொய்மை அகற்றி புலமை வரவே
புண்ணியம் யாவுமே புண்ணியம் பெறவே
பசுமைப் பதிக்கும் பாதம் காக்க
பரவொளித் தாயவள் பக்தரைக் காக்க
மூடிய மனத்தினைத் திறப்பவள் காக்க
மூளும் மேகத்தில் சிரிப்பவள் காக்க
செழிக்கும் பயிரை சக்தியவள் காக்க
நிலைக்கும் பக்தியைப் பக்குவம் காக்க

ஆறும் நீர்பெற அனந்தம்மா காக்க
அனைவரின் அழுகையைத் துடைத்தவள் காக்க
அறியாமைத் துயரை அறிபவள் தீர்க்க
அன்பே பெருக ! அன்னையே தருக !
பெண்டிர் கற்பும் பைந்தமிழ் சிறப்பும்
பண்பும் பரிவும் பராசக்தி காக்க
தகதிமி தகதிமி தகதக தகவென
திசை எரிக் கனலில் ஒளியும் சூழ !

தகஜொனு தகதிமி தரிகிட தகிட

நதியலைப் புனலாய் கவிதையும் வாழ !

துருவமும் பருவமும் உருவமும் உருகிட

அருவமாய் நிறையும் ஆற்றலே வருக !

லஹிமா காற்றின் பறவையே வருக

சம்சாரக் கட்டவிழ்ச் சிறகினைத் தருக

ஞானம் கானம் தானம் உயர்க

மோனம் மோனம் மோனம் நிறைக !

குறையே இல்லை குணத்தின் குன்றே

கவசம் ஓதிட நலமே நன்றே

கனவே துயரம் கனவே வாழ்க்கை

நீந்த அறியேன் தோணியாய் உன் கை

வள்ளல் ஜோதியை உள்ளத்தில் கண்டவள்

வெள்ளைப் பங்கஜ பதமே சரணம்

சாதியைக் கடந்த நல் சத்தியத் தாயே

சாதிக்கத் துணை செய் சரணம் சரணம்

காவி நிறமே அம்மையே சரணம்

காவிய சங்கம சத்குரோ சரணம்

ஆனந்த வருடத்தில் ஜனித்தவள் சரணம்

ஆண்டுதசம் தவத்திலே ஒளிர்ந்தவள் சரணம்

பஞ்சிலே தனலாய் நெருப்பினைத் தந்தாய்

நஞ்சுண்டராவுக்கு சிறப்பினைத் தந்தாய்

சிசு மணாளன் குணவதியின் ஆயுளை

சக்கரை அம்மை நீ சந்ததியைக் காக்கவே

கண்ணெதிர் தோன்றும் வழியாய் வருக

கண்ணயரும் போதுன் மடியினைத் தருக

நற்பயன் ஈன்ற அற்புதமே வருக

சொற்பயன் பெறவே சுடர்கவி தருக

பரந்த வானிடை பறந்து நீ வருக

பரந்த அகம்தனை பக்தர்க்குத் தருக

பந்தம் அகற்றி சுகந்தம் தருக

சந்தனக் கவசத்தில் எழுந்து நீ வருக

வானூர்தியெனும் முகிலென வருக
வான்மியூரின் ஒளி அகலென வருக
தேன்சாரல் துளி கடலென பெருக
தானே அணைக்கும் தாயே வருக
திருந்தாதவர்க்கும் திருத்தமாய் வருக
அருந்தாதவர்க்கு அமுதம் தருக
சிரந்தாழ்ந்தவர்க்குச் சிறப்பினைத் தருக
மருந்தீஷ்வரனின் மருந்தே வருக

சதங்கைப் பாதம் களிநடம் புரிக
சிதம்பர ரகசியப் பொருளே வருக
காஞ்சி முனிவன் கருவறைத் தவமே
கருணை செய்வாய் கற்பகத் தருவே
கோமளீஷ்வரக் குயில் ராகமே வருக
கோகுல துளசிக் கோலமே வருக
ஸ்ரீ சக்ர லஹரியில் தவழ்ந்தே வருக
சிரிக்கின்ற மலரே கரம்தனில் வருக

அங்கிங்கலைந்து உன் பதம் அடைந்தேன்

எங்குமிலாத அமைதியை உணர்ந்தேன்

சங்கு சக்கரம் போலவே சுழன்றேன்

உன் மடி அடைந்தேன் ஊண் சுகம் மறந்தேன்

கண் இமை மூடவே தியானத்தில் நிறைந்தேன்

யான் எனதென்பதை உன்னிடம் உகந்தேன்

வானின் நீலமாய் ஆண் பெண் உணர்ந்தேன்

வானுக்கு நிறமிலை ஆன்மீகம் புரிந்தேன்

கண்ணை இமைபோல் காப்பதுன் கவசம்

விண்ணையும் மண்ணையும் இணைப்பதுன் ஸ்பரிசம்

அன்னையில்லாமல் ஏழ் உலகேது ?

அன்னையில்லாமல் ஆருயிரேது ?

அன்னை பேசாவிடில் மொழிகளுமில்லை

அன்னை தேற்றாவிடில் ஆறுதலில்லை

அன்னை தராவிடில் ஆகாரமில்லை

அவள் உறவின்றி ஆதாரமில்லை

போதும் இப்பிறவி பொறுத்தருள்வாயே !
மோதும் சலனத்தைத் தடுத்தருள்வாயே !
ஏதும் சுகமில்லை ஏதும் நிஜமில்லை
நீயும் கைவிடில் யார் துணை தாயே ?
மாயம் மாயம் ஜெகமே மாயம்
காயம் மாயம், கவலையும் மாயம்
மாயங்கள் அகற்றும் மகத்துவம் நீயே
நோய்நொடி நீக்கும் மருத்துவத் தாயே !

பிள்ளைப் பிராயத்தில் பெருந்தவமாகி
பிள்ளை யானுன் பெரும்புகழ்பாடி
பிள்ளையென் தமிழை நீயும் பொறுத்து
பிள்ளைத் தமிழாய்ப் பேசிடச் செய்வாய்
வெள்ளை உள்ளம் நீ எமக்கருள
வெள்ளை அன்னம் மீதேறி வருவாய்
தங்கம் ஜொலிக்க செல்வம் கொழிக்க
சிங்கத்தின் மீதேறி தைரியம் தருவாய்

பிரியா வரமே ப்ரியக் கரமே

பிரியா நினைவே ப்ரியத் துணையே

பிரிவினை அகற்றும் பரசிவன் உமையே

பிரியங்கள் எம்மேல் பொழியும் அம்மையே

அறியா பொழுதில் அறிவைத் தருவாய்

புரியா வாழ்வில் தெளிவைத் தருவாய்

சரியா தவறா ஏதும் யான் அறியேன்

நிறைவும் நிகழ்வும் நீதர மகிழ்வேன்

அன்பில் பழக அறமாய் ஒழுக

அறிவில் மகிழ அனைவரும் புகழ

நட்பதும் பிறக்க நடப்பதும் சிறக்க

இயற்கைச் செழிக்க இயல்இசை இனிக்க

இதயமும் வளர இளமையும் மிளிர

வைரமாய் வையகம் வளமையில் ஒளிர

நற்பெயர் நற்பயன் யாவரும் கொணர

நல்ல தெய்வத்தை தவம் தனில் புணர

**ஓம் ஓம் ஓம் என காற்றின் ரீங்காரம்**

காண்பவை யாவுமே தாயின் சிருங்காரம்

சத்தியக் கவசம் சத்குரு கவசம்

சக்கரைத் தாயின் சந்தனக் கவசம்

ஜெய்ஸ்ரீ சக்தி சரணம் ஜெய ஜெய

ஜெய்ஸ்ரீ சரஸ்வதி சரணம் ஜெய ஜெய

ஜெய்ஸ்ரீ லக்ஷ்மி சரணம் ஜெய ஜெய

ஜெய்ஸ்ரீ சக்கரை அம்மா ஜெய ஜெய

